ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

03.10.2018 - மலர் 15, இதழ் 32



## சோயுஸ் கெப்சியூலில் வாயுக் கசிவு

ஆபத்தை எதிர்நோக்கிய விண்வெளி வீரர்கள்

விலை ரூபா 15/-



வாரத்தில் 7 நாட்களுக்கு பெயர் வந்த விதம்...



பொலன்னறுவையின் சிவாலயங்கள்




பூனைகள் தடைசெய்யப்படவுள்ள கிராமம்

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச விண்வெளி நிலையத்தின் கெப்சியூலில் வாயுக் கசிவு



பூமியின் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துடன் தொடர்புடைய ரஷ்யாவின் 'சோயுஸ்' ரக விண்கலத்தின் கெப்சியூலில் அண்மையில் வாயுக் கசிவு ஏற்பட்டது. இதனையடுத்து, சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்த விண்வெளி வீரர்கள் விரைவாக செயற்பட்டு அந்த கோளாறை நிவர்த்திசெய்ததாக நாஸா நிறுவனம் தெரிவித்துள்ளது.

விண்வெளிவீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்வதும் மீள பூமிக்கு வருவதும் இந்த கெப்சியூல் மூலமே ஆகும். அத்துடன், சர்வதேச விண்வெளி நிலையத்திற்குத் தேவைப் படுகின்ற பொருட்களைக் கொண்டு செல்வதற்காகவும் இந்த கெப்சியூல்தான் பயன்படுத்தப்படுகின்றது.

## சிறிய விண்கல் துண்டு

விண்வெளியில் பயணித்த சிறிய விண்கல் துண்டொன்று இந்த கெப்சியூலில் மோதியதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்பினாலேயே இதில் வாயுக் கசிவு ஏற்பட்டதாக நாஸா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும்!

கெப்சியூலில் ஏற்பட்ட வாயுக் கசிவை சரிசெய்வதற்கு விண்வெளிவீரர்கள் மிகவும் சிரமப்பட்டனர். இந்த கோளாறு திருத்தி அமைக்கப்படாவிட்டால், சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கின்ற விண்வெளிவீரர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்று நாஸா நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# பூனைகள் தடைசெய்யப்படவுள்ள கிராமம்

நியூசிலாந்தின் தென் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள 'ஓமோய்' எனும் சிறிய கிராமத்தில் பூனைகளை தடைசெய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அண்மையில் அந்நாட்டு செய்திச் சேவையொன்று அறிவித்திருந்தது.

இந்த கிராமத்தை சூழவுள்ள பகுதிகளில் நியூசிலாந்துக்கே தனித்துவமான பறவைகள், பாலூட்டிகள், ஊர்வன போன்ற பல்வேறு உயிரினங்கள் வசித்துவருகின்றன.





## பல்வேறு உயிரினங்களுக்கு அச்சுறுத்தல்

ஓமோய் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் பூனைகள் உள்ளன. இந்த பூனைகளால் அங்குள்ள ஏனைய உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகக் கூறியே, அங்கு பூனைகளுக்கு தடைவிதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அப்பகுதியில் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான பூனைகளினால் இந்த உயிரினங்கள் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது. எனவே, இதற்குரிய தீர்வாக குறித்த பூனைகளை இக்கிராமத்திலிருந்து அப்புறப்படுத்த வனஜீவி அதிகாரிகளும் சூழலியலாளர்களும் தீர்மானித்துள்ளனர். மேலும், இந்த விடயம் தொடர்பில் நியூசிலாந்து சுற்றாடல் அமைச்சும் கிராமத்தவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு விளக்கமளித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புகளிலிருந்து பாதுகாக்கும் புதுவகை காலுறை...!


மாணவர்களை நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்கும் தன்மையைக்கொண்ட புதுவகையான காலுறைகளை சந்தையில் அறிமுகப்படுத்தியிருப்பதாக கன்துரட்ட குழும நிறுவனம் அறிவித்துள்ளது.

டெங்கு நுளம்புகளிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த காலுறை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் நியூஸிலாந்து தராதரத்தைக் கொண்டுள்ள இந்த காலுறை, நுளம்புகளால் நெருங்க முடியாதவகையிலான இரசாயன வாசனையைக் கொண்டதாகவும், சருமத்திற்கு எவ்வித பாதிப்பு நேராத வகையிலும் காற்றோட்டம் மிக்கதாக அமைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய் Vijey

த.பெ.எண் 2037,
கொழும்பு.
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652




## தரம்-5

# புலமைப்பரிசில் பெறுபேறுகள் ஒக்டோபர் 5 இல் வெளிவரும்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் ஒக்டோபர் 5 ஆம் திகதி வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று லட்சத்து ஐம்பதாயிரத்து முன்னூற்று இருபத்தாறு பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இம்முறை வெளிவரவுள்ள பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கான நிதியுதவியும் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு நூலகத்திற்கு புதிய கட்டடம்



மட்டக்களப்பிலுள்ள பொது நூலகத்திற்கு புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கு தேவையான ரூ 169.97 மில்லியன் நிதியை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பிரதமர் அவர்களின் யோசனைக்கமையவே, இத்திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. 50 வருட பழமையான மட்டக்களப்பு பொது நூலகத்திற்கான இந்த புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்ததும், பழைய நூலகம் புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்திலேயே, இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

## தரம்-01 அனுமதி:

# முறைகேடுகள் இருப்பின் தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தவும்!

பாடசாலைகளில் தரம்-01 இற்கு மாணவர்களை அனுமதிப்பதில் அநீதிகள் நடைபெறுமானால் அது குறித்து அறிந்து கொள்வதற்கு தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்துமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தகவல் அறியும் சட்டத்தின்படி கோரப்படும் தகவல்களை முறையாகப் பெற்றுக்கொடுக்குமாறு கல்வி அதிகாரிகளையும் அதிபர்களையும் கல்வி அமைச்சர் பணித்துள்ளார்.

தரம்-01 இற்கு மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் அவர்களின் பெயர் விபரங்கள் காட்சிப்படுத்தப்படும் அதேவேளை, தெரிவு செய்யப்படாத மாணவர்களின் பெற்றோர் மேன்முறையீடு செய்யவும் முடியும்.தவறான முறையில் எவருக்கேனும் அனுமதி வழங்கப்பட்டிருந்தால், அப்பிள்ளைகளை பாடசாலையிலிருந்து வெளியேற்ற வேண்டியேற்படும் எனவும் கல்வி அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

# இலங்கை கோரிக்கை விடுத்தால் பயிற்சிக்கு ஆசிரியர்களை அனுப்புவோம்

## தமிழக அமைச்சர் செங்கோட்டையன்

இலங்கையிலுள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தமிழ்நாட்டின் ஆசிரியர்களது உதவி தேவைப்படுகையில் அது குறித்து முறையாக இலங்கையிலிருந்து கோரிக்கை விடுக்கப்படுமாயின், ஆசிரியர்களை அனுப்பி வைக்க தமிழ்நாட்டு அரசாங்கம் தயாராகவே இருப்பதாக தமிழ்நாட்டின் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாண நூலகத்திற்கு 50 ஆயிரம் நூல்களை தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார்பாக வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த போதே, அமைச்சர் மேற்கண்ட கருத்தை தெரிவித்திருந்தார்.

EASY WAY TO ENGLISH
through Sinhala and Tamil
ඉංග්‍රීසි ඉගෙනුමට සිංහල - දෙමළ පහසු මග
ஆங்கிலம் கற்பதற்கு சிங்களம்-தமிழ் ஊடாக இலகு வழி

சிங்களம் அல்லது தமிழ் பேசுகின்ற எந்தவொரு இலங்கையரும் ஆங்கில மொழியை முழுமையாக சீர்பட பயன்படுத்தக்கூடிய ஒரே மும்மொழி பாடநூல்

ANTONY FERNANDO Ph.D
with Kavithaa S.Rajaratnam

அத்தியாயங்கள் 32, விலை ரூபா 450. இன நல்லுறவிற்கும் வழி அமைக்கும் இந்த நூலினை பரீட்சித்துப் பார்க்க விரும்புகின்ற எவராயினும் தமது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை எமக்கு அனுப்பி இரண்டு மாதிரி பாடங்களை இலவசமாக பெற்றுக்கொள்ளமுடியும்.

Inter-Cultural Book Promoters
21 G4, Peramuna Mawatha,
Eldeniya, Kadawatha.
Tel: 011 2925359 / 0777074372
inculture@sltnet.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்கொடை

மன்னன் ஒருவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அங்கு ஒரு முனிவரைக் கண்டான். அவரோடு சிறிது நேரம் உரையாடிய மன்னன் பெரு மகிழ்ச்சியுற்று, தன்னிடமிருந்து ஏதாவது நன்கொடையொன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அவரை வேண்டினான். முனிவரோ "எதுவும் வேண்டாம். என் நிலைமையில் மனத்திருப்தியை முழுவதுமாகப் பெற்றுள்ளேன். இம்மரங்கள் எனக்கு உண்ணப் போதிய கனிகளைக் கொடுக்கின்றன; இவ்வழகிய தூய நீரோடைகள் எனக்கு வேண்டிய நீரையெல்லாம் தருகின்றன; இக்குகையிலே நான் உறங்குகிறேன். நீ ஒரு மன்னாதி மன்னனாயினும், உன் நன்கொடைகளை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

மன்னனும் "மகாமுனிவரே மன்னிக்கவேண்டும். தாங்கள் என்னை மகிழ்விக்க ஏதேனும் ஒன்றை நன்கொடையாகப் பெற நகருக்குள் என்னோடு எழுந்தருள்க" என்று வேண்டினான். இறுதியில் முனிவர் மன்னனோடு நகருக்குள் செல்ல இசைந்தார். அவரை மன்னன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். அங்கே முனிவர் பொன்னும் மணியும், பளிங்கும் மற்றும் பல வியத்தகு பொருள்களும் இருக்கக் கண்டார். செல்வமும் அதிகாரமும் எங்கும் விளங்கின. மன்னன் முனிவரைக் காத்திருக்குமாறு கூறி, நீராடி இறை தரிசனம் செய்தார். "இறைவா! இன்னும் மிகுந்த செல்வமும், மக்களும் நாடும் எனக்கு அருள்க" என்று உரத்துப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினான்.

இதற்கிடையே முனிவர் எழுந்து வெளியே செல்ல முற்பட்டார். அவர் செல்வதைக் கண்ட மன்னன், தனது பிரார்த்தனையை நிறுத்திவிட்டு அவரைப் பின்தொடர்ந்து "மகா முனிவரே சற்று நில்லுங்கள்; தாங்கள் எனது நன்கொடையைப் பெறாது செல்கின்றீர்களே" என்றான். முனிவர் அவனை நோக்கி, "மன்னா! பிச்சைக்காரரிடம் நான் இரப்பதில்லை. உன்னால் என்ன கொடுக்க இயலும்? நீயே இறைவனிடம் இரக்கின்றாய்" என்று கூறினார். "அன்பு வெளிப்படும் முறை இதுவன்று. இறைவனிடம் இதைத் தா அதைத்தா என்று நீ வேண்டுவாயானால் இறை அன்பிற்கும் வியாபாரத்திற்கும் என்ன வேறுபாடு?" என்று முனிவர் கூறியதைக் கேட்டு மன்னன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.



## வாரம் ஒரு பறவை

தொகுப்பு
சிலாவத்தை கிருஷ்ணராசா

## தூக்கணாங் குருவி (Baya Weaver)



இது இலங்கையிலும் வேறு பல ஆசிய நாடுகளிலும் உள்ளது. இந்தப் பறவையின் கூடமைக்கும் திறன் மனிதர்களை வியக்க வைக்க வல்லது. 'கூடமைக்கும் பறவைகளின் அரசன்' எனவும் இவை புகழப்படுகிறது. இவற்றைப் புல் நிலங்களிலும், விவசாயத் தரைகளிலும் கூட்டமாகக் காண முடியும். தூக்கணாங் குருவி பூச்சிகள் சிறு தானியங்களை விரும்பி உண்ணும்.

இவற்றின் கூடுகளை முள் மரங்களிலும், ஓலைத் தலைப்புகளிலும் காணலாம். முடியுமாயின் நீரின் மேல் நீண்டிருக்கும் கிளைகளில், தொங்கும் வகையில், தூக்கணாங் குருவி தனது கூட்டை அமைக்கும். தூக்கணாங் குருவியும், திணைக் குருவியும் நட்பாக இருக்கும். திணைக் குருவி, தூக்கணாங் குருவிக் கூட்டினுள் புகுந்து விளையாடும். கைவிடப்பட்ட தூக்கணாங் குருவிக் கூடுகளை திணைக் குருவி தனதாக்கிக்கொள்ளும்.

இனப்பெருக்க காலம் தொடங்கும்போது ஆண் குருவியே கஷ்டப்பட்டு கூடு கட்டும். கட்டப்பட்ட கூடுகளை ஆராய்ந்து தனக்குப் பிடித்தமான கூட்டை உடைய ஆண் பறவையை, பெண் பறவை சோடியாக்கிக்கொள்ளும். ஆண், பெண் பறவைகள் தோற்றத்தில் வேறுபடுவன. ஆண் பறவை மஞ்சள் மற்றும் கபில நிறங்களை உடையது. பெண் குருவி வெள்ளை மற்றும் கபில நிறமுடையது.

# கேள்விக்கு பதிலும் பதிலிலிருந்து கேள்வியும்

கொத்மலை ஆறு எந்த ஆற்றின் கிளை ஆறாகும்?

**மகாவலி ஆறு**

மகாவலி ஆறு எந்த இடத்தில் கடலுடன் சங்கமிக்கின்றது?

**கொட்டியாரம் விரிகுடாவில்**

கொட்டியாரம் விரிகுடா எந்த துறைமுகத்தின் அருகாமையில் உள்ளது?



**திருகோணமலை துறைமுகத்தின் அருகாமையில்**

திருகோணமலை துறைமுகம் பண்டைய காலத்தில் எப் பெயரால் அழைக்கப்பட்டது?

**கோகன்ண**

கோகன்ண துறைமுகத்தின் சிறப்பு என்ன?

**இது ஒரு இயற்கை துறைமுகமாகும்**

இயற்கைத் துறைமுகமான திருகோணமலை துறைமுகத்தினால் உருவான விரிகுடா காரணமாக கப்பல்களுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன?

**புயல் பாதிப்பு, தென்மேல் மற்றும் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றின் தீவிரத்திலிருந்து பாதுகாப்பு பெறல்.**

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழையினால் பிரதானமாக நன்மை பெறும் இலங்கையின் பிரதேசம் எது?

**ஈரவலயம்**

ஈரவலயத்தில் காணப்படுகின்ற உலக மரபுரிமைக்கான வனாந்தரம் எது?

**சிங்கராஜா வனாந்தரம்**

சிங்கராஜா வனாந்தரம் எந்தெந்த மாகாணங்களில் பரந்துள்ளது?



**காலி,மாத்தறை, இரத்தினபுரி.**

இரத்தினபுரி மாவட்டத்தின் தேசிய அருங்காட்சியகமாகப் பயன்படுத்தப்படுகின்ற இல்லம் யாருடையது?



**எஹலபொல அதிகாரத்தின் இல்லம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

NEWSPAPER IN EDUCATION

# மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை - மன்னார்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் 'Newspaper in Education' திட்டத்தின்கீழ் நடத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறையின் மற்றுமொரு நிகழ்வு அண்மையில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மேற்படி பயிற்சிப் பட்டறையில் மன்னார் ஈச்சலவக்கை G.T.M., மன்/பாப்பாமோடை R.C.T.M.S, மன்னார் பரப்பக்கண்டல் R.C.T.M.S, மன்னார் ஆண்டான்குளம் R.C.T.M.S, மன்னார் பெரியமடு MV, மன்/அடம்பன் M.M.V, மன்/கருக்கண்டல் R.C.T.M.V, மன்/வட்டக்கண்டல் G.T.M.S மற்றும் மன்/இலுப்பைக்கடவை G.T.M.S ஆகிய பாடசாலைகள் கலந்து கொண்டன.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரத்தில் 7 நா

வாரம் என்பது ஏழு நாட்களைக் கொண்டதாகும். அது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வாரத்தில் ஏழு நாட்கள் என ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் அது தொடர்பாகப் பல்வேறு நாடுகளாலும் பல்வேறு கோத்திர மக்களாலும் பல்வேறு எண்ணிக்கையான நாட்கள் பயன்படுத்தப் பட்டு வந்தன. இன்றும் ஆபிரிக்காவில் 1960 கோத்திரத்தினரிடையே நான்கு நாட்களை உள்ளடக்கிய வாரமே பாவனையில் உள்ளது. இதற்கமைவாக, நாம் பயன்படுத்துகின்ற வாரத்தின் ஏழு நாட்களுக்கும் எவ்வாறு பெயர் வந்தது என்பதனை சற்றுப் பார்ப்போம்.

## திங்கள்

தமிழில் நாம் திங்கட்கிழமை என்கிறோம். திங்கள் என்பது சந்திரனைக் குறிக்கும். சிங்கள மொழியில் 'சந்துதா' என திங்கட்கிழமையை அழைப்பர். இதுவும் சந்திரனுடன் தொடர்புடைய சொல்லாகும். ஆங்கிலத்தில் Monday என்பர். Moonday என்பது Monday என வருகிறது. சமஸ்கிருத மொழியில் சந்ரவார் என்பர், துருக்கிய மொழியில் பசர்டெய் என அழைப்பர். அதன் பொருள் ஞாயிறுக்கு மறுதினம் என்பதாகும். பிரான்சிய மொழியில் Landi எனவும், ஜப்பானிய மொழியில் Gersuyoubi எனவும் திங்கட்கிழமை அழைக்கப்படுகின்றது.




## புதன்

இது புதன்கிழமை எனப்ப(
சிங்கள மொழியில் இதனை '
என்பர். சமஸ்கிருத மொழியி
புதவார் எனவும், ஆங்கில மெ
Wednesday எனவும் அழைப்
புதன் கிரகத்தைச் சேர்ந்த நா
ஆங்கிலத்தில் இக் கிரகம் Mer
எனப்படும்.


நோர்வேஜியரின் கதைகளு
அமைய Wednesday எனும் ெ
Odian எனும் Wondanaz எனு
தெய்வத்தின் பெயருடன் தெ
டையதாக உருவாகியுள்ளது.
இத்தாலிய மொழியில் Merool
எனவும், ஸ்பானிய மொழியி
Miercoles எனவும், ஜேர்மன்
மொழியில் Mittwoch எனவும்
புதன்கிழமை அழைக்கப்படு



## செவ்வாய்

தமிழ் மொழியில் செவ்வாய்க்கிழமை என்கிறோம். இது செவ்வாய்க் கிரகத்துடன் தொடர்புடையது. சிங்கள மொழியில் 'அங்கஹருவாதா' எனவும், ஆங்கிலத்தில் Tuesday எனவும் இது அழைக்கப்படுகின்றது. சமஸ்கிருதத்தில் 'மங்களவார்' எனப்படுகின்றது.

நோர்வேஜியர்களின் மாயக் கதைக்கு அமைய Tin எனும் Tiw கடவுளின் பெயரில் Tuesday எனும் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது. இக்கடவுள் யுத்தத்திற்கு அதிபதி என அவர்கள் நம்புகின்றனர். தாய்லாந்து மொழியில் அங்காரகய என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் 'சிவப்பு நிறமுடைய நபர்' என்பதாகும். செவ்வாய்க் கிரகத்தின் நிறம் சிவப்பு என்பதால் அவ்வாறு பெயர் வைத்திருக்கலாம்.



ஓகஸ்ட் 27 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ட்களுக்கு பெயர் வந்த விதம்...

ிகிறது.
பதாதா'
ல்
மாழியில்
பர்.
ாகும்.
cury
க்கு
சால்
ு
ாடர்பு
led
ல்
கின்றது.

## வியாழன்

இது வியாழக்கிழமை எனத் தமிழிலும், 'பிரஹாஸ்பதின்தா' என சிங்களத்திலும், 'குருவா' என சமஸ்கிருத மொழியிலும் அழைக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் Thursday எனப்படுகிறது. ஆங்கிலத்தில் வியாழக் கிரகமானது Jupiter எனப்படும்.

பண்டைய உரோமர்கள் ஜுப்பிட்டரை வானத்திற்கும், இடிமுழக்கத்திற்கும் அதிபதியான தெய்வம் எனக் கருதினர். நோர்விஜிய கதைகளுக்கு அமைய Thursday, Thor எனும் கடவுளின் பெயரிலேயே தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகின்றது.

Thor தெய்வம் இடி முழக்கத்திற்கு அதிபதி எனக் கருதப்படுகிறது. அத்தெய்வம் Odin தெய்வத்தின் மூத்த புதல்வராகும். மிகவும் பலம் வாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறது.

## வெள்ளி

இது தமிழில் வெள்ளிக்கிழமை எனவும், சிங்களத்தில் 'சிக்குராதா' எனவும் அழைக்கப்படும். கிறிஸ்தவர்கள் வருடத்தில் ஒரு நாள் பெரிய வெள்ளிக்கிழமையை அனுசரிக்கின்றனர். அது சோகமான நாளாகும். வெள்ளிக்கிழமை இஸ்லாமியர் சமய வழிபாடுகளில் ஈடுபடும் சிறப்புத் தினமாகும். Friday எனும் பெயர் நோர்விஜிய கதைகளில் வரும் Freyja எனும் தேவதையின் பெயரிலிருந்தே தோன்றியுள்ளது. அவள் அழகுக்கு அதிபதி எனப்படுகிறாள். அவள் Odin தெய்வத்தின் மனைவியாவாள்.


பண்டைய அங்லோ சாக்சனியர்கள் Frige தேவதையின் பெயரைத் தழுவி Friday என்ற பெயர் வந்ததாக நம்புகின்றனர். வெள்ளிக்கிழமைக்கு அதிபதி வெள்ளிக் கிரகமாகும். ஆங்கிலத்தில் இது வீனஸ் எனப்படும். வீனஸ் தேவதை அழகிற்கும், அன்பிற்கும் அதிபதியாவாள்.

## ஞாயிறு

இதனை ஞாயிற்றுக்கிழமை என அழைக்கிறோம். சிங்கள மொழியில் 'இரிதா' என்கிறார்கள். இது சூரியனுடன் தொடர்புடையது. ரிவ், ரிவி என்பது சூரியனுக்கு சமஸ்கிருதத்தில் வழங்கும் பெயர்களாகும். சமஸ்கிருதத்தில் ஞாயிறு தினத்தை ஆதித்யவார் என்பர். ஆங்கிலத்தில் Sunday என்கிறோம்.

கிறிஸ்தவர்கள் பாஸ்கா ஞாயிறு தினத்தை ஆண்டிற்கு ஒரு முறை கொண்டாடுவர். இது தவிர கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஞாயிறு தினத்தையும் முக்கிய தினமாகக் கருதி ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுவர்.






## சனி

சனிக்கிழமை என நாம் தமிழில் கூறுகிறோம். இது சனிக் கிரகத்துடன் தொடர்புடையது. சனிக்கிழமையை 'செனசுராதா' என சிங்களத்தில் அழைப்பர். சமஸ்கிருதத்தில் சனிவார் எனவும், ஆங்கிலத்தில் Saturday எனவும் அழைப்பர். சனிக் கிரகத்திற்கு ஆங்கிலத்தில் Saturn எனப்படுவதால் இது ஆங்கிலத்தில் Saturday எனப்படுகின்றது.

பண்டைய உரோமர்கள் செட்டரின் எனும் தெய்வத்தை விவசாயத்திற்கு அதிபதி எனக் கருதினர். இத்தெய்வத்தின் பெயரிலேயே இது செட்டர் டே எனப்படுகிறது என்ற கருத்தும் நிலவுகிறது. ஒல்லாந்த மொழியில் Rohorai என இது அழைக்கப்படுகின்றது.

## பண்டைய மக்கள் பயன்படுத்திய வாரத்தின் நாட்கணக்கு

| | |
|---|---|
| இந்தோனேஷியர் | - 5 நாட்கள் |
| மேற்கு ஆபிரிக்காவின் சுக்கான் கோத்திரத்தினர் | - 6 நாட்கள் |
| யூதர்கள் [கி.மு.6 ஆம் நூற்றாண்டு] | - 7 நாட்கள் |
| பண்டைய சீன ஷாங் அரசவம்சம் | - 10 நாட்கள் |
| எகிப்தியர் | - 10 நாட்கள் |
| அஸ்டெக் இனத்தவர் | - 13 நாட்கள் |
| மாயா இனத்தவர் | - 13 நாட்கள் |

- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான சிலந்திகள்

## Jumping Spiders



jumping spiders என்று அழைக்கப்படும் சிலந்தி இனங்களுக்கு அபாரமாக பாயும் ஆற்றல் இருக்கிறது. தமது அளவை போல, 50 மடங்கு தூரத்திற்கு அவற்றால் பாய முடிகிறது. இது, ஒரு மனிதன் 300 அடி தூரம் பாய்வதற்கு நிகரானது. பாயும் முன்னர், தன் வயிற்றுக்கு கீழ்புறமாக இருக்கும் ச்பின்னேரெட் பகுதியிலிருந்து ஸ்பைடர் மேன் போல வலையை வீசிக்கொண்டு பாய்கிறது இந்த சிலந்தி. இன்னும் சொல்லப்போனால், இந்த இயல்புதான் ஸ்பைடர் மேன் கதாபாத்திரத்தையே உருவாக்கியது என்றும் சொல்லலாம்.

## மயில் சிலந்தி



நடனம் ஆடுவதற்காக, மயில் சிலந்தி அதாவது, பீகொக் ஸ்பைடர் தயாராக இருக்கிறது. மிகச்சிறிய அளவைக் கொண்டிருந்தாலும், தன் முதுகுப் பகுதியில் இருக்கும் அழகான வண்ணமயமான நிறங்கள் இந்த சிலந்திகளின் சிறப்பம்சமாகும். அதுமட்டுமல்ல, எந்த நடன இயக்குனரிடமும் நடனம் பயிலாமல், பெண் சிலந்திகளை கவர்வதற்காக ஆண் சிலந்திகள் போடுகின்ற இந்த வண்ண நடனங்கள், சிலந்திகள் உலகின் மிக அபூர்வமான காட்சிகளாகும். கால்கள், தலை, முதுகு என்று அனைத்து பகுதிகளையும் விதம் விதமாக அசைத்து, எப்படியாவது பெண் சிலந்தியை கவர்ந்துவிட வேண்டும் என்பதுதான் இந்த நடனத்தின் நோக்கம்.

## கொலாயத் டரன்டுலா



உலகின் அளவில் மிகப் பெரிய சிலந்தி இனமாக கருதப்படுவது கொலாயத் டரன்டுலா எனப்படுகின்ற சிலந்தி இனமாகும். 30 சென்டிமீட்டரை விடவும்பெரியதாக வளரக்கூடிய இந்த ராட்சத சிலந்திகள் பறவை உண்ணும் சிலந்திகள் என்றும் அழைக்கப்படுகின்றன. அமேசன் காடுகளில் அதிகமாக காணப்படும் இந்த சிலந்திகள் உண்மையாகவே சில சமயங்களில், சிறிய பறவைகளை வேட்டையாடுவது உண்டு. ஆனால் அனேகமாக, பூச்சி, பல்லி, தவளை, ஓணான், பாம்பு, எலிகள் போன்ற உயிரினங்களே, இவற்றின் பிரதான ஆகாரங்களாகும். ஆபத்து நேரும்போது, தனது மயிர்களை காற்றில் உதிர்ப்பது இந்த சிலந்தி கொண்டுள்ள ஓர் இயல்பாகும். இந்த மயிர்கள் தோல், கண்கள், வாய் ஆகிய பகுதிகளில் எரிவு போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவை.

## ட்ராப் டோர்



மண்ணுக்குள்ளே அல்லது மரம் போன்ற ஏதாவது ஒரு பகுதியில், தன் அளவுகேற்ற வகையில் ஒரு சிறு பொந்தினை அமைக்கிறது இந்த சிலந்தி. அதன் வாயிலில் மறைந்து நின்று கொண்டு, அருகாக வரும் இரையை பாய்ந்து பிடித்து, தன் பொறிக்குள் சட்டென கொண்டு செல்கிறது. 30 ஆண்டுகளுக்கும் மேலாக உயிர் வாழக்கூடிய இந்த சிலந்தி இனம், உலகின் ஆயுட்காலம் கூடிய சிலந்தி இனமாகும்.

-ஜெ.விபாகர்

## அதிமேதாவி — 26

கதை, ஓவியம் எச்டி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ.த (சா/தர)

# கணிதம்

## மாதிரி வினாத்தாள்

வழங்குபவர்: செல்வி. த.எட்வீனா அனுலா,
NDT Maths, BABM (Hons)
ஆசிரியை - கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

**கணிதம்**-II பகுதி-A இரண்டு மணித்தியாலம்

01) பாலா என்பவர் ரு100000 ஐ 14% எளிய வட்டிப்படி இரு வருடத்தில் மீளச் செலுத்தும் ஒப்பந்தத்தில் கடனாகப் பெற்றார்.

(i) பாலா அப்பணத்தை ஒரு வியாபாரத்தில் முதலீடு செய்தார். அவர் முதலாம் ஆண்டின் முடிவில் 50% இலாபமடைந்தார். அவர் பெற்ற இலாபம் எவ்வளவு?

(ii) கடனுக்காக அவர் செலுத்த வேண்டிய இரு வருட வட்டி யாது?

(iii) அவர் இக்கடனை 10% கூட்டு வட்டிக்கு வாங்கியிருப்பின் அவர் கடனை அடைக்கத் தேவையான மொத்தப் பணம் யாது?

(iv) இரண்டாம் வருட முடிவில் கடனை முற்றாகச் செலுத்த அவருக்குத் தேவையான பணம் எவ்வளவு?

02) $y=-x^2-2x+3$ என்ற சார்பின் வரைபை வரைய பூரணமற்ற அட்டவணையொன்று தரப்பட்டுள்ளது

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -5 | 0 | 3 | ☐ | 3 | 0 | -5 |

(i) $x=-1$ ஆகும்போது y இன் பெறுமானத்தைக் காண்க.

(ii) வரைபினை வரைந்து,


a) சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் காண்க.
b) சார்பின் உயர்வுப் பெறுமானம் யாது?
c) சார்பின் திரும்பல் புள்ளியின் ஆள் கூறுகளை எழுதுக

03) a) A, B என்பன இரு தாயங்களாகும்

$$A=\begin{pmatrix}3 & 2\\ -1 & 1\end{pmatrix} \quad B=\begin{pmatrix}1 & -2\\ -1 & 3\end{pmatrix}$$


(i) தாயம் B யின் வரிசை யாது?

(ii) A B ஐக் காண்க.

b) 


ABCD என்பது ஒரு செவ்வகமாகும். அதன் நீள, அகலம் x,y சார்பாக தரப்பட்டுள்ளது. எதிர்ப்பக்க நீளங்கள் சமன் என்பதைப் பயன்படுத்தி AB, BC யின் நீளத்தைக் காண்க.

04) A, B என்ற இரு நகரங்களிற்கிடையான தூரம் 120km ஆகும். A நகரத்திலிருந்து B நகரத்திற்கு P என்ற வாகனச் சாரதி $x\text{kmh}^{-1}$ என்ற சராசரிக் கதியில் பயணம் செய்கிறார். Q என்ற வாகனச் சாரதி A யிலிருந்து B யிற்கு P இலும் பார்க்க $20\text{kmh}^{-1}$ குறைவான கதியில் பயணம் செய்கிறார். Q என்ற சாரதிக்கு எடுக்கும் காலமானது P என்ற சாரதிக்கு எடுக்கும் காலத்தைவிட 1 மணித்தியாலம் குறைவானது. P என்ற சாரதியின் சராசரி கதியைக் காண்க.

05) 


AB என்பது கிடைத்தரையிலுள்ள நிலைக்குத்தான கம்பமாகும். இதனை நிலைக்குத்தாகப் பேண A யிலிருந்து கிடைத்தளத்தின் இரு பகுதியிலும் உள்ள தூரம் முறையே C-15m, D-20m. $A\hat{D}B$ $30^0$ 30' ஆகும். B, C, D என்பன ஒரே தளத்தில் அமைந்துள்ளது.

(i) வரிப்படத்தை விடைத்தாளில் பிரதிசெய்து தரப்பட்ட தரவுகளை குறித்துக் காட்டுக.

(ii) திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்தி $C\hat{A}B$ இன் பெறுமானத்தைக் காண்க.

06) குறித்த ஒரு வியாபாரி, தனது வியாபார நிலையத்தில் ஜூன் மாதம் ஒன்றில் விற்பனை செய்த மாவின் அளவு பற்றிய மீடிறன் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| நாளொன்றில் விற்பனை செய்த மாவின் அளவு (kg) | நாட்களின் எண்ணிக்கை (f) |
|---|---|
| 0-8 | 2 |
| 8-16 | 3 |
| 16-24 | 4 |
| 24-32 | 10 |
| 32-40 | 8 |
| 40-48 | 2 |
| 48-56 | 1 |

(i) இப்பரம்பலின் ஆகார வகுப்பு யாது?

(ii) இப்பரம்பலின் இடையினை ஆகார வகுப்பை எடுகொண்ட இடையாகக் கொண்டு கணிப்பிடுக.

(மிகுதி அடுத்த வாரம்)

விடைகள் கணிதம் - II பகுதி - B

**26.09.2018 ஆம் திகதி பிரசுரமாகியது**

01) a) இறப்பர் பந்து $\frac{2}{7}$

எஞ்சியது $\frac{5}{7}$

அலங்காரப் பொருள் $= \frac{5}{7} \times \frac{3}{4} = \frac{15}{28}$

(i) $\frac{2}{7}$

(ii) $\frac{15}{28}$

(iii) $\frac{15}{28} = 22.5$

$\frac{1}{28} = 1.5l$

முழுப்பாலின் அளவு = 42l

b) $\left(4\frac{1}{2} - 2\frac{3}{4}\right)$ இன் $= \frac{4}{5}$

$= 1\frac{3}{4} \times \frac{4}{5}$

$= \frac{7}{4} \times \frac{4}{5} = \frac{7}{5} = 1\frac{2}{5}$

02) (i) வளை

மேற்பரப்பளவு $= 2\pi rh$

$= 2 \times \frac{22}{7} \times 14^2 \times 15$

$= 1320\text{cm}^2$

(ii) மொத்த மேற்பரப்பளவு

$= \pi r^2 + 1320$

$= \frac{22}{7} \times 14^2 \times 14 + 1320$

$= 616 + 1320$

$= 1936\text{cm}^2$

(iii) $\pi r^2 h$

$= \frac{22}{7} \times 14^2 \times 14 \times 15$

$= 9240\text{cm}^2$

03) a) (i) $500000 \times \frac{8^2}{100} \times \frac{1}{4}$

ரூ 10000

(ii) ரூ 40000

b) (i) $500000 \times \frac{15}{100}$

75000+500000

ரூ 575000

(ii) 11%

04) a) (i) $n(A\cup B) = n(A) + n(B) - n(A\cap B)$

(ii) $n(A\cup B) = n(A) + n(B) - n(A\cap R)$

$= 8+10-0$

$= 18$

மூட்டற்ற தொடை

b) $\Sigma = \{1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15\}$

$A = \{1, 3, 5, 15\}$

$B = \{1, 3, 5, 7, 9, 11, 13, 15\}$

$n(A) = 4$

$n(B) = 8$

$A^1 = \{2, 4, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14\}$

$B^1 = \{2, 4, 6, 8, 10, 12, 14\}$

$n(A\cup B)^1 = \{2, 4, 6, 8, 10, 12, 14\}$

05) (i) வலையுரு வரைந்து அதில் மீடிறன் பல்கோணி அமைத்தல்

(ii) வரைபைப் பயன்படுத்தி இடைவீச்சுக் காணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ..................................................

★ சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

**01.** கொத்துக் கொத்தாகப் பூக்கும் தாவரம் யாது?

1. அலரி 2. செவ்வரத்தை
3. அந்தூரியம் 4. சூரியகாந்தி

**02.** உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுக் கூறு யாது?

1. இறைச்சி 2. விற்றமின்
3. இலிப்பிட்டு 4. புரதம்

**03.** இலங்கை தேசிய கொடியில் பச்சைநிறம் குறித்துக் காட்டுவது யாது?

1. தமிழர் 2. முஸ்லிம்கள்
3. இலங்கையர் 4. சிங்களவர்

**04.** இலங்கையின் மிக உயர்ந்த மலை எது?

1. பீதுருதாலகால மலை
2. சிவனொளிபாத மலை
3. நமுனுகுல கந்த மலை
4. கதிர்காம மலை

**05.** பிராணிகளின் உருவங்கள் செய்யப் பயன்படாதது எது?

1. சவர்க்காரம் 2. கடல் மாங்காய்
3. பன்னாரை 4. வெண்டிக்காய்

**06.** தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

1. நல்லதம்பி 2. சோமசுந்தரப் புலவர்
3. ஆறுமுக நாவலர் 4. பொன்னம்பலம்

**07.** லொறி ஒன்றில் மண்ணெண்ணெய் பரல் ஒன்றை ஏற்றுவதற்குப் பொருத்தமான எளிய பொறி யாது?

1. ஏணி 2. ஆப்பு 3. சாய்தளம் 4. கப்பி

**08.** பந்தல் இடப்பட்டு வளர்க்கப்படும் தாவரம் அல்லாதது;

1. புடோல் 2. மிளகாய்
3. பாகல் 4. வெற்றிலை

**09.** பின்வருவனவற்றுள் பறவைகள் சரணாலயம்;

1. குமண 2. பின்னவல
3. யால 4. வில்பத்து

**10.** பொருட்களை இறுக்கமாகப் பிடிக்கப் பயன்படுவது;

1. சாவணம் 2. குறடு
3. தனல் இடுக்கி 4. சுத்தியல்

**11.** மின்வேலை செய்வோர் பயன்படுத்துவது;

1. குறடு 2. திருகாணி செலுத்தி
3. கால்கவசம் 4. மேற்கூறிய யாவும்




**12.** யாழ்ப்பாணம் அமைந்துள்ள இடம்;

1. வட மாகாணம் 2. தென் மாகாணம்
3. கிழக்கு மாகாணம் 4. மேல் மாகாணம்

**13.** வீட்டிலுள்ள அனைவரும் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய உபகரணம்;

1. பற்தூரிகை 2. சீப்பு
3. கைக்குட்டை 4. மின்விசிறி

**14.** எந்த உணவுப்பொருளாயினும் கொள்வனவு செய்யும்போது, கவனிக்க வேண்டியது;

1. அதன் விலை 2. கூடிய விலை
3. அழகிய முறையில் பொதி செய்தல்
4. காலாவதியாகும் திகதி

**15.** வித்துக்களை நீக்கிய பின் உணவுக்குப் பயன்படுத்தும் காய் வகைகள் எவை?

1. கத்தரி, வெண்டி 2. போஞ்சி, சிறகவரை
3. வாழை, அன்னாசி 4. பூசணி, வெல்லரிக்காய்

**16.** பயிர்ச்செய்கைக்கு உகந்த மண் யாது?

1. களிமண் 2. மணல் மண்
3. வண்டல் மண் 4. இருவாட்டி மண்

**17.** நல்லூர் கோயில் அமைந்துள்ள மாவட்டம் யாது?

1. யாழ்ப்பாணம் 2. வவுனியா
3. மட்டக்களப்பு 4. பளை

**18.** பின்வருவனவற்றுள் மிகவும் நறுமணம் வீசும் இலை;

1. பலா 2. ரோஜா
3. நெல்லி 4. தேசிக்காய்

**19.** மரவள்ளிக்கிழங்கை அவிக்கப் பயன்படுத்தக்கூடிய பாத்திர வகை யாது?

1. எவர் சில்வர் 2. அலுமியம்
3. மண்சட்டி 4. சீனச் சட்டி

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

## கணிதம்

(செப்டெம்பர் 26 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)


| | | | | |
|---|---|---|---|---|
| 01) | 01. 1 | 02. 2 | 03. 2 | 04. 1 |
| | 05. 1 | 06. 2 | 07. 3 | 08. 1 |
| | 09. 3 | 10. 2 | | |
| 02) | 01. (i) 9753 | (ii) 3579 | | |
| | 02. 12610 | 03. 8899, 8901 | | 04. 44 மாம்பழங்கள் |
| | 05. 38 | 06. 2027 | 07. 90 | 08. 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## A பகுதியிலுள்ளவற்றின் மற்றைய பாகத்தை B பகுதியில் இனங்கண்டு உரிய இலக்கமிடுக

A


1 2 3 4



B



## இலக்கங்களுக்கமைய நிறந்தீட்டுக




African Elephant

1-blue 2-green 3-grey 4-pink

## படங்களுக்குப் பொருத்தமான எழுத்துக்களை வெட்டி ஒட்டுக

எ ய ன் யி பெ ல் ரு சூ ல் ஊ ம கி வி மு கு ம த ல் சி









-நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டேவிட், கிரிக்கெட் விளையாட்டில் அதிக ஆர்வம் கொண்டுள்ளான். எனவே, தற்போது அவன் பாடசாலை கிரிக்கெட் அணியிலும் சேர்ந்துள்ளான். டேவிட் நன்றாக துடுப்பெடுத்தாடுவான். அவன் சிறப்பாக பந்துவீசுவான். இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பெற வேண்டும் என்பதே டேவிட்டின் எதிர்கால லட்சியம் ஆகும்.

| | |
|---|---|
| 1. டேவிட் ஆர்வமாகவுள்ள விளையாட்டு எது? | ★ கால்பந்து<br>★ கிரிக்கெட்<br>★ டெனிஸ் |
| 2. டேவிட்டின் திறமைகள் எவை? | ★ சிறப்பாக துடுப்பெடுத்தாடல்<br>★ விரைவில் ஆட்டமிழத்தல்<br>★ சிறப்பாக பந்துவீசுதல் |
| 3. அவன் தற்போது சேர்ந்துள்ள அணி எது? | ★ மாகாண கிரிக்கெட் அணி<br>★ பாடசாலை கிரிக்கெட் அணி<br>★ ரோயல் கிரிக்கெட் அணி |
| 4. டேவிட்டின் எதிர்கால லட்சியம் என்ன? | ★ பாடசாலை கிரிக்கெட் அணியில் சேருதல்<br>★ உயர்தரம் கற்றல்<br>★ தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பெறுதல் |

## இந்தக் காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என இலக்கமிட்டுக் காட்டுக















ஜோன் தனது மனைவி, மகள், மகன் ஆகியோருடன் ........................ (சுற்றுலா/ பாடசாலை) சென்றார். அவர்களின் செல்லப்பிராணியான ........................ (யானைக்குட்டியும்/நாய்க்குட்டியும்) அவர்களுடன் சென்றது. ........................ (சிவப்பு/பச்சை) நிற வாடகை வேன் ஒன்றிலேயே அவர்கள் ........................ (பயணித்தனர்/தங்கியிருந்தனர்). அவர்கள் எடுத்துச் செல்லும் ........................ (பொருட்கள்/புத்தகங்கள்) யாவும் வாகனத்தின் கூரைப்பகுதியில் ஏற்றப்பட்டிருந்தன.


1. படத்தொகுதியில் காணப்படும் இடங்கள் எவை?

........................................................................

2. படத்தொகுதியில் காணப்படும் பொருட்களைக் குறிப்பிடுக.

........................................................................
















3. எமக்குத் தேவையான புத்தகங்களை இங்கிருந்து பெற்று வாசிக்கலாம். அந்த இடம் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

........................................................................

4. 'map' என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் யாது?

........................................................................


-ஜிநு

Digitized by Noolaham Foundation.

யாழ்ப்பாணம் பொதுநூலகம்



## குறுக்கெழுத்துப் போட்டி: 312



### மேலிருந்து கீழ்

01. உண்மை பேசுபவன்.
02. வீரன்- எதிர்ப்பாற்சொல்.
03. சக்தி.
05. கோயில் விழாக்களின்போது பக்தர்கள் இதனை தோளில் சுமந்தவாறு ஆடுவதுண்டு. (குழம்பியுள்ளது)
07. கடையேழு வள்ளல்களில் ஒருவர்.

### இடமிருந்து வலம்


01. மாடிவீடு.
04. பொழுது சாயும் நேரம். (குழம்பியுள்ளது)
06. வாசனை. (மாறியுள்ளது)
07. உபயோகம்.
08. சங்கு.
09. வேலை.

### குறுக்கெழுத்துப் போட்டி: 311 விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 த | 2 சா | வ | தா | ர | ம் |
| ரு | மை | 3 ஒ | | | |
| ம | | ர் | றா | ற் | 4 உ |
| ன் | | ரு | | வே 5 | தி |
| | னை | | | று | |
| ய் | சே 6 | மை | | மை | 7 ஆ |

## பொருத்தமான படத்துடன் இணையுங்கள்

airplane
garbage truck
car
tractor
helicopter
dump truck
bulldozer
bus



## அடுத்து வர வேண்டியது எது?







## வழி காட்டுங்கள்




## எத்தனை உள்ளன?






## அறிவுக்கு விருந்து (19.09.2018) விடைகள்







★ எழுத்துக்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய சொற்கள்:

புரி, புண், புயல், புல், புகல், புரிதல், தரி, தண், கரி, கண், கயல், கல்

Digitized by Noolaham Foundation.



எஸ்.சாரணியா,
கோணக்கலை தமிழ் மகா
வித்தியாலயம், பசறை.







மோகன் பிரவீன்,
கோட்லோஸ் விஞ்ஞானக் கல்லூரி,
நுவரெலியா.



எஸ்.அபிநாத்,
வெஸ்ட்ஹோல் தமிழ்
வித்தியாலயம், கட்டபுலா.



நி.சுயார்த்தன்,
கிளி/திருவையாறு மகா
வித்தியாலயம், திருவையாறு.



எம்.அகீலா,
மா/மின்ஹாஜ் மகா
வித்தியாலயம், நிககொல்ல.



ற.பாத்திமா ஸஹ்மா,
மட்/ம.ம. அல்-ஜுப்ரியா
வித்தியாலயம், ஏறாவூர்.



ஆர்.விஜயபாபு,
ப/நாயபெத்த இல-01 தமிழ்
வித்தியாலயம், பண்டாரவளை.




பாத்திமா ஹஸ்னா,
குருகுத்தல முஸ்லிம் மகா
வித்தியாலயம், குருகுத்தல.



எஃப்.அஸ்பா,
அல்-அமான் முஸ்லிம் மகா
வித்தியாலயம், மினுவாங்கொட.

# பக்டீரியாக்களின் இயல்புகள்







பக்டீரியாக்களுக்கு மைய நரம்புத் தொகுதியோ அல்லது உணர்வுடன் கூடிய நரம்புத் தொகுதியோ இருப்பதில்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எனினும், இவற்றுக்கு பௌதீக ரீதியான தொடுகையை உணரக் கூடிய திறன் உள்ளது. பக்டீரியாக்கள் பிற உயிரினங்களை ஒட்டி வாழ்வதால் பிற உயிரினக் கலங்களுக்கு நுழைதல், ஆபத்துக்களை அறிதல், தவிர்த்தல் என்பனவற்றுக்கு இத்தொடுகை உணர்வு அதற்கு பெரும் உதவியாக உள்ளது.

தொடுகை உணர்வு என்பது உயிரினங்களுக்கு இருக்க வேண்டிய ஓர் உணர்வு. இதற்கு பக்டீரியாக்களும் விதிவிலக்கல்ல. பக்டீரியாக்கள் சில தமது விதிகளை மாற்றி அமைத்துக்கொள்வதால் ஆபத்தான சில பக்டீரியாக் களை அழிப்பதில் சிக்கல் நிலை ஏற்படுகின்றது.

# மர அட்டைகள்











மர அட்டைகள் மழைக்காலங்களில் மிகவும் அதிகமாகவே காணப்படும். மண்வளத்தைப் பாதுகாப்ப திலும் சூழலில் உள்ள கழிவுப் பொருட்களை உட்கொள்வதிலும் இந்த மர அட்டைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இவற்றில் பல நிறங்கள் உள்ளன. சிவப்பு நிற சிறிய அட்டை மற்றும் கறுப்பு, மண்நிறம், வெளிர் பச்சை ஆகிய நிறங்களிலும் இது சூழலில் காணப்படுகிறது. இந்த அட்டைகள் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது தமது உடலை மிக விரைவாக சுருட்டிவிடுகின்றன. இதற்கு அதன் உடலின் மென்மையான பாதுகாப்பு ஓடுகளே காரணமாகின்றன. இவை தொடுகை உணர்வுகளை தசை செல்கள் மூலம் மர அட்டைக்கு உணர்த்திவிடுகின்றன. மர அட்டையின் மூளைக்கலங்களில் ஏற்படும் அதி விரைவான உணர்வுப் பரிமாற்றம் அதன் உடலை வேகமாக சுருட்டிக் கொள்ளச் செய்கின்றது. இதன் பின் இதற்கு இலகுவில் தீங்கிழைத்து விடவும் முடியாது. இதன் உடலில் சுரக்கும் துர்மணம் கொண்ட ஒரு திரவமும் மர அட்டையை எதிரிகள் நெருங்கிவிட முடியாதபடி விரட்டி அடிக்கின்றது. இவை மர அட்டைக்கு இயற்கை வழங்கிய சிறப்பான தகவமைப்பாக வும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.

# ஒரு மாதத்திற்கான எண்ணெய்யை சேமித்து வைக்கக்கூடிய விளக்கு



ஒரு மாதத்திற்குத் தேவையான தேங்காய் எண்ணெய்யை சேமித்து வைக்கக்கூடிய வசதியுடனான 'நவீன எண்ணெய் விளக்கு' (Modern Oil Lamp) ஒன்று குருணாகலை மலியதேவ வித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்கின்ற நிலேஷ் லோச்சன அமரதுங்க என்ற மாணவனால் வடிவமைக்கப்பட்டுள்ளது.



### விளக்கின் பயன்கள்

இதுவொரு நவீனமயப்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் விளக்காகும். இந்த விளக்கில் காணப்படுகின்ற தேங்காய் எண்ணெய்யை சேமித்து வைக்கும் தாங்கி போன்ற அமைப்பானது, விளக்கினைத் தாங்கி நிற்கும் ஆதாரப் பகுதியாகவும் உள்ளது.

இந்த விளக்கினை வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். மாதத்திற்கு ஒரு தடவை இதில் எண்ணெய் ஊற்றினால் போதுமானது. எண்ணெய் விரயமாகாமல் இருக்கும் வகையிலும் ஒரு மாதத்திற்கு எண்ணெய்யை சேமித்து வைத்திருக்கக்கூடிய வகையிலுமே இந்த விளக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், நேர விரயம் மற்றும் பண விரயம் என்பன குறைவதாக நிலேஷ் லோச்சன தெரிவித்துள்ளார்.






### போட்டிகளில் வெற்றி

பாடசாலை மட்டம், மாகாண மட்டம் மற்றும் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் கலந்துகொண்டதன்மூலம் இந்த மாணவன் தனது புத்தாக்கத்திற்காக வெள்ளிப் பதக்கம் உட்பட, மேலும் பல பரிசுகளையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது
விலை Rs. 10/=
wijeyanewspapers helping shape opinion
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

අම්මා: පුතා, හවසට මාමලගේ ගෙදර යන්න ඕනේ.
புதா, ஹவசட்ட மாமலகே கெதர யன்ன ஓனே.
**அம்மா: மகன், பின்னேரம் மாமா வீட்டுக்குப் போக வேண்டும்.**

පුතා: ඒ ඇයි අම්මේ?
ஏ எய் அம்மே?
**மகன்: அது ஏன் அம்மா?**

අම්මා: මාමා රට ඉඳලා ඇවිත්.
மாமா ரட்ட இந்தலா எவித்.
**அம்மா: மாமா வெளிநாட்டில் இருந்து வந்துள்ளார்.**

පුතා: මාමා කවදද ආවේ?
மாமா கவதத ஆவே?
**மகன்: மாமா எப்போது வந்தார்?**

අම්මා: ඊයේ ආවේ. අපට අද එන්න කිවුවා.
ஈயே ஆவே. அபட்ட அத என்ன கிவுவா.
**அம்மா: நேற்று வந்தார். எங்களுக்கு இன்று வரச் சொன்னார்.**

: පුතාට මාමා කාර් එකක් ගෙනාවා කිවුවා.
புதாட்ட மாமா கார் எகக் கெனாவா கிவுவா.
**: மகனுக்கு மாமா கார் ஒன்று கொண்டு வந்ததாக சொன்னார்.**

පුතා: ඇත්තද? අපි දැන්මම යමුකෝ අම්මේ.
எத்தத? அப்பி தென்மம யமுகோ அம்மே.
**மகன்: உண்மையா? நாங்கள் இப்போதே போவோம் அம்மா.**

අම්මා: නැහැ පුතා. අපි අක්කත් ආවාම යමු.
நெஹெ புதா. அப்பி அக்கத் ஆவாம யமு.
**அம்மா: இல்லை மகன். நாம் அக்காவும் வந்த பிறகு போவோம்.**

පුතා: අක්කා එන්නේ කීයටද?
அக்கா என்னே கீயட்டத?
**மகன்: அக்கா எத்தனை மணிக்கு வருவார்?**

අම්මා: අක්කා අද වේලාසන එනව කිවුවා.
அக்கா அத வேலாசன எனவ கிவுவா.
**அம்மா: அக்கா இன்று நேரகாலத்தோடு வருவதாகச் சொன்னார்.**



## பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ............ රට ඉඳලා ඇවිත්.
2. ........... එකක් ගෙනාවා.
3. අක්කා එන්නේ ...............?




## இறந்தகால தனி வாக்கியம்
## Past simple tense

★ இறந்தகால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற 'வினா' நிலை வாக்கியங்களிலும் மற்றும் 'எதிர்மறை' நிலை வாக்கியங்களிலும் 'did' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லானது (Past tense Auxiliary verb) எப்பொழுதும் உதவிபுரியும் வினைச்சொல்லாகவே (Helping verb) செயல்படுகின்றது என்பதை நாம் ஞாபகத்தில்கொள்ள வேண்டும்.

★ தகுந்த உதாரணங்களை மேலும் இங்கே பயில்வோம்.

அ) Did the cat run into the kitchen?
அந்தப் பூனை சமையலறைக்குள் ஓடியதா?
(வினா வாக்கியம்-Interrogative sentence)

ஆ) Yes, it ran into the kitchen.
ஆம், அது சமையலறைக்குள் ஓடியது.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative sentence)

இ) No, it did not run into the kitchen.
இல்லை, அது சமையலறைக்குள் ஓடவில்லை.
(எதிர்மறை வாக்கியம்-Negative sentence)

★ Did the cat run? (Interrogative)
அந்தப் பூனை ஓடியதா? (வினா நிலை)

★ Yes, the cat ran. (Affirmative)
ஆம், அந்தப் பூனை ஓடியது. (உடன்பாடு நிலை)

★ No, the cat did't run. (Negative)
இல்லை, அந்தப் பூனை ஓடவில்லை. (எதிர்மறை நிலை)

★ ★ ★ ★

ஈ) Did the parcel fall from the table?
பொதி மேசையில் இருந்து கீழே விழுந்ததா?
(வினா வாக்கியம்-Interrogative sentence)

உ) Yes, it fell down from the table.
ஆம், அது மேசையில் இருந்து கீழே விழுந்தது.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative sentence)

ஊ) No, it did not fall from the table.
இல்லை, அது மேசையில் இருந்து கீழே விழவில்லை.
(எதிர்மறை வாக்கியம்-Negative sentence)

★ Did the parcel fall down? (Interrogative)
பொதி கீழே விழுந்ததா? (வினா நிலை)

★ Yes, the parcel fell down. (Affirmative)
ஆம், பொதி கீழே விழுந்தது. (உடன்பாடு நிலை)

★ No, the parcel didn't fall down. (Negative)
இல்லை, பொதி கீழே விழவில்லை. (எதிர்மறை நிலை)

★ fell - இறந்தகால வினைச்சொல் -Past tense verb
★ fall - நிகழ்கால வினைச்சொல் -Present tense verb

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இலங்கை அணியின் நிலைமை கவலை அளிப்பதாக உள்ளது”

## ரொஷான் மாஹாநாம



இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய நிலையைப் பார்க்கையில் கவலையாகவும் அவமானமாகவும் இருப்பதாக முன்னாள் வீரர் ரொஷான் மாஹாநாம தெரிவித்துள்ளார்.

“இலங்கை அணியினர் தோல்வியடையும் விதமானது, மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாகவும் உள்ளது. எனவே, இது குறித்து வீரர்களும் நிர்வாகிகளும் உணர்தல் வேண்டும். இலங்கை கிரிக்கெட்டை இந்த நிலைக்கு கொண்டு சென்றதையிட்டு அவர்கள் வெட்கப்படவேண்டும். எனவே, இனியாகிலும் நன்றாக சிந்தித்து சிறந்த பெறுபேறுகளை அடையக்கூடியவாறு போட்டித் திறனை மேம்படுத்த வேண்டும்” எனவும் மஹாநாம மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மெத்யூஸின் விலகல்




இலங்கையின் ஒருநாள் மற்றும் T20 அணிகளின் தலைவராக இருந்த எஞ்சலோ மெத்யூஸ் தலைமை பதவியிலிருந்து விலகியுள்ளமை நாம் அறிந்ததே. இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் சந்திம ஹத்துருசிங்ஹ மற்றும் தெரிவுக் குழு உறுப்பினர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கவே மெத்யூஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இலங்கை அணி தொடர்ச்சியாக தோல்விகளை சந்தித்து வந்தமையினால் ஏற்பட்ட அழுத்தங்களின் காரணமாகவே, மெத்யூஸ் இந்த நிலைமைக்கு ஆளாகியமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய, ஒருநாள் மற்றும் T20 அணியின் தலைவராக தினேஷ் சந்திமால் நியமிக்கப்பட்டுள்ளார்.




# இலங்கையில் முதல் தடவையாக ‘பேஸ்போல்’ போட்டிகள்

இலங்கையில் முதல் தடவையாக ‘சர்வதேச பேஸ்போல்’ (Base Ball) போட்டித் தொடரொன்றை நடத்துவதற்கு இலங்கை ‘பேஸ்போல்’ சங்கம் தீர்மானித்துள்ளது. தியகம பேஸ்போல் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த போட்டிகளில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், நேபாளம் ஆகிய நாடுகள் போட்டியிடவுள்ளன.

போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடைபெறும். இப்போட்டியில் வெற்றிபெறும் அணி 2020 ஆம் ஆண்டு நடைபெறும் ஆசிய கிண்ண பேஸ்போல் போட்டியில் கலந்துகொள்வதற்கான தகுதியை பெறும். 1980 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் ‘பேஸ்போல்’ அறிமுகமாகியமை குறிப்பிடத்தக்கது.



# அழைப்பு விடுத்தால் மீண்டும் வருவேன்

—திலகரட்ண டில்ஷான் தெரிவிப்பு



இலங்கை அணியில் போட்டியிடுமாறு தன்னை அழைத்தால் நாட்டின் தேவை கருதி மீண்டும் இலங்கை அணியில் போட்டியிடுவதற்கு தான் தயாராக இருப்பதாக முன்னாள் வீரர் திலகரட்ண டில்ஷான் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் இலங்கை அணி பலத்த பின்னடைவை சந்தித்துள்ள நிலையில் கடும் விமர்சனங்களையும் எதிர்கொண்டு வருவதையும் கருத்தில் கொண்டே டில்ஷான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் இலங்கை அணியை அதற்கு தயார் படுத்த வேண்டியுள்ள நிலை இருப்பதனால் இலங்கை அணிக்கு என்னால் முடிந்த பங்களிப்பை வழங்கத் தயாராகவே உள்ளேன்” எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் ‘வோலிபோல்’ தோல்வி குறித்து விசாரணை




கொழும்பில் நிறைவுபெற்ற முதலாவது ஆசிய கிண்ண ‘வொலிபோல்’ [ஆடவர்] போட்டியில் சவூதி அரேபியாவிடம் 3/1 என்ற கணக்கில் தோல்வியுற்றது. இதில் முதலாவது சுற்றில் 25/22 என இலங்கை வெற்றியீட்டிய போதிலும், மிகுதி இரண்டு சுற்றுக்களிலும் முறையே 25/22, 25/19 என இலங்கை தோல்வியுற்றது.

இந்த போட்டியில் குறிப்பிட்ட சிரேஷ்ட வீரர்கள் மூன்றுபேரை இடம்பெறச் செய்யுமாறு பணிக்கப்பட்டிருந்த போதிலும், அது குறித்துக் கவனத்தில் கொள்ளப்படாமையும் இந்த தோல்விக்கு காரணமா? என்ற கோணத்திலும் இது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அணி தோல்வி அடைந்தமைக்கான பின்னணிக் காரணிகளை அறிவதற்கான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

சவூதி அரேபியாவுடனான மேற்படி போட்டியில் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய அழிவை ஏற்படுத்திய
# க்ரகட்டோவா எரிமலை வெடிப்பு

இந்தோனேஷியாவின் சுமாத்ரா மற்றும் ஜாவா தீவுகளுக்கு இடையில் அமைந்திருந்த ஒரு தீவுதான் 'க்ரகட்டோவா' (Krakatoa) ஆகும். இது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட எரிமலை வெடிப்பினால் உருவான ஓர் எரிமலைத் தீவாகும். 1883ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் ஏற்பட்ட பாரிய எரிமலை வெடிப்பினால் இந்த தீவின் நூற்றுக்கு எழுபது சதவீதமான பகுதிகள் அழிந்து விட்டன. அதன் பின்னர் அந்த இடத்தில் புதிதாக சிறிய தீவொன்று உருவானது. இந்த சிறிய தீவானது இந்தோனேஷிய மொழியில் 'அனக் க்ரகட்டோவா' என அழைக்கப்படுகின்றது. இதன் அர்த்தம் 'க்ரகட்டோவா குழந்தை' என்பதாகும்.

## நீண்ட உறக்கத்தின் பின்னர்...

நீண்ட கால இடைவெளியின் பின்னர் 1883ஆம் ஆண்டு மே மாதம் க்ரகட்டோவா தீவில் வெடிப்பு ஒன்று நிகழ்ந்தது. க்ரகட்டோவா எரிமலை உறக்கம் கலைந்து விழித்தெழுந்துவிட்டதாக அப்பொழுது கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து வெடிப்புச் சத்தங்கள் தீவில் கேட்டன. மே, ஜூன், ஜூலை மாதங்களில் வெடிப்புகளும் குமுறல்களும் அதிகரித்தன. தீவில் காணப்பட்ட ஓர் எரிமலையிலிருந்து சாம்பல், நீராவி, பாறைத் துண்டுகள் என்பன வெளியேறத் தொடங்கின.

பின்னர் ஓகஸ்ட் 26ஆம் திகதி ஏற்பட்ட வெடிப்புகளினால் அதனை அண்மித்ததாக அமைந்திருந்த சிறிய தீவுகளிலும் ஜாவா, சுமாத்ரா ஆகிய தீவுகளிலும் காணப்பட்ட வீடுகள் அதிர ஆரம்பித்தன. அத்துடன், மறுநாள் காலை 5:30 மணியளவில் க்ரகட்டோவா தீவு முற்றாக வெடித்துச் சிதறியது. அங்கிருந்து வெளிப்பட்ட எரிமலைக் குழம்பு, சாம்பல் முகில்கள் மற்றும் சுனாமி அலைகளின் தாக்கத்தினால் சுமாத்ரா, ஜாவா மற்றும் அதன் அருகாமையில் இருந்த தீவுகளில் வசித்த சுமார் 36,000 பேர் உயிரிழந்தனர்.


வில்லியம் எஸ்க்ரொப்ட்டியின் ஓவியமொன்று

## எரிமலை சீற்றம் நிகழ்ந்த காலப்பகுதிகள்

1883 மே 20 -

## உலகில் நிகழ்ந்த பயங்கரமான எரிமலை வெடிப்புகள்

- ★ விசுவியஸ் வெடிப்பு - கி.பி. 79
- ★ க்ரகட்டோவா வெடிப்பு - 1883
- ★ பெலே வெடிப்பு (மாட்டினிக் தீவு) - 1902
- ★ சென். ஹெலன்ஸ் வெடிப்பு (ஐக்கிய அமெரிக்கா) - 1980



இந்தோனேஷியாவின் 100 ரூபா நாணயத்தாளில் க்ரகட்டோவா

## ஆரம்ப கால க்ரகட்டோவா

ஆரம்ப காலத்தில் க்ரகட்டோவா தீவானது, மக்கள் சூன்யப் பிரதேசமாகவே இருந்தது. இந்த தீவில் 7 கிலோமீற்றர் அகலம் கொண்ட பாரிய எரிமலை வாய் ஒன்று காணப்பட்டது. கி.பி. 416இல் நிகழ்ந்த எரிமலை வெடிப்பின் போதே, இந்த வாய் உருவாகியுள்ளது. அதன் பின்னர் 1680ஆம் ஆண்டில்தான் இந்த எரிமலை இறுதியாக வெடித்துச் சிதறியுள்ளது. இதனை அடுத்து மீண்டுமொரு முறை குறித்த எரிமலை வெடிக்கும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. எனவே, அண்மைய தீவுகளில் வாழ்ந்த மக்கள் இத்தீவிற்கு வந்து பழங்கள், விறகுகள் என்பனவற்றை சேகரித்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

## க்ரகட்டோவாவும் ஹிரோஷிமாவும்

இதுவரை உலகில் நிகழ்ந்த எரிமலை வெடிப்புகளுடன் ஒப்பிடும்போது, 1883 ஆம் ஆண்டு நிகழ்ந்த க்ரகட்டோவா எரிமலை வெடிப்பானது மிகவும் மோசமானதாகக் கருதப்படுகின்றது. இது, 1945இல் ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் வீசப்பட்ட அணுகுண்டு வெடிப்பினைவிட, 1300 மடங்கு சக்தி வாய்ந்ததாகும் எனக் கூறப்படுகின்றது.

## உலக காலநிலையில் மாற்றம்

1883ஆம் ஆண்டில் ஏற்பட்ட க்ரகட்டோவா எரிமலை வெடிப்பினையடுத்து பூமியின் காலநிலை சீரற்றதாக காணப்பட்டது. வட அரைக்கோளப் பகுதியில் வெப்பநிலை 1.2 செல்சியஸ் பாகையினால் வீழ்ச்சியுற்றது. உலகம் முழுவதும் சல்ஃபர் டயொக்சைட் வாயுவின் அளவு அதிகரித்தது. அதிக காற்று வீச ஆரம்பித்தது. பூமியெங்கும் குளிர் அதிகரித்தது. இந்த சீரற்ற காலநிலை சுமார் 5 ஆண்டுகளுக்கு பின்னர்தான் சாதாரண நிலையை அடைந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் 27 வரை

### மே 20


க்ரகட்டோவா தீவுக்கு அருகாமையில் சிறியளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கடல் அலையின் வேகமும் அளவும் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து க்ரகட்டோவா தீவில் மெல்லிய வெடிப்புச் சத்தங்கள் கேட்டன.

### ஜூன் 11

மீண்டும் அங்கு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. அதனுடன் சிறியளவிலான புகை வெளியேறியது. கரும்புகை மெல்லப் மெல்ல பரவ ஆரம்பித்தது.







இதனால் சூரிய ஒளி கிடைப்பதில் தடை ஏற்பட்டது. சூரிய ஒளி குறைந்தமையினால் வெப்பநிலை வீழ்ச்சி அடைந்தது.

### ஜூன் 24

எரிமலைக்கு மேலாக பாரிய சாம்பல் வெளியேற்றம் தென்பட்டது. அத்துடன், கடல் ஆழமும் பெருமளவில் அதிகரித்திருந்தது. கடல் நடுவில் ஏற்பட்ட பாரிய அலைகள் மற்றும் நிலநடுக்கத்தினால் கடலில் பயணித்துக்கொண்டிருந்த கப்பல்கள் கடல் நடுவில் நங்கூரமிட்டன.

### ஓகஸ்ட் 11

அதிகளவு புகை வெளியேற்றம் காணப்பட்டது. தொடர்ந்து சிறியளவிலான வெடிப்புகளும் நிகழ்ந்தன. கடலிலும் தரையிலும் பெரும் புயல் ஏற்பட்டது. கடல்நீர் மட்டம் பெருமளவில் அதிகரித்தது. இதனால் கடலில் பயணித்துக்கொண்டிருந்த கப்பல்கள் விபத்துக்களை சந்தித்தன.

### ஓகஸ்ட் 26

க்ரகட்டோவா தீவில் பெரும் வெடிப்புகள் ஏற்படத் தொடங்கின. பெரும் புகை வெளியேற ஆரம்பித்தது. கடலிலும் தரையிலும் புயல் ஏற்பட்டது. ஜாவா, சுமாத்ரா தீவுகளில் சுனாமி அலைகள் உருவாகின.


### ஓகஸ்ட் 27

காலை 5:30 மணியளவில் ஆரம்பமான வெடிப்புகளினால் பாரியளவிலான சுனாமி அலைகள் உருவாகின. இதனையடுத்து சுற்றியுள்ள தீவு மக்களும் நிலநடுக்கத்தின் பாதிப்புகளை உணரத் தொடங்கினர். காலை 6:44 மணியளவில் நிகழ்ந்த வெடிப்பினால் க்ரகட்டோவா தீவின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் சுனாமி அலைகள் உருவாகின. காலை 10:02 மணியளவில் பாரிய எரிமலை வெடிப்பு நிகழ்ந்தது. இந்த எரிமலை வெடிப்பு சத்தத்தை 3110 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மேற்கு அவுஸ்திரேலியாவின் பேர்த் நகர மக்களும் 4,800 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மொரிஷியஸ் தீவு மக்களும் கேட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஓவியங்களும் திரைப்படங்களும்


க்ரகட்டோவா எரிமலை வெடிப்புக் காரணமாக, வானில் பிரகாசத்தன்மை குறைந்தது. வான்பரப்பு மிகவும் வித்தியாசமாக காட்சியளித்தது. எரிமலை வெடிப்பினால் வெளியேறிய கரும்புகை வான்பரப்பில் அடுக்கடுக்காகப் படிந்திருந்தது. வில்லியம் எஸ்க்ரொட்டி எனும் பிரித்தானிய நாட்டு ஓவியர்,இந்த காட்சி களை ஆயிரக்கணக்கான ஓவியங்களாக வரைந்தார். இன்றளவில் அந்த ஓவியங் கள் வரலாற்றுச் சின்னங்களாக மாறியுள்ளன.

அவ்வாறே, க்ரகட்டோவா எரிமலை வெடிப்பினை மையப்படுத்தி 1969இல் அமெரிக்காவில் திரைப்படமொன்று தயாரிக்கப்பட்டது. அந்த திரைப்படத்தின் பெயர் 'Krakatoa, East of Java' என்பதாகும். பேர்னாட் எல். கோவல்ஸ்கி என்பவரே, இத்திரைப்படத்தின் இயக்குநராவார்.




க்ரகட்டோவா திரைப்படத்தின் சுவரொட்டியொன்று






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அப்படியா சங்கதி?

-தீபன்

"அப்பா" பிரியா அழைப்பதைக் கேட்டு, வாசித்துக்கொண்டிருந்த பத்திரிகையை மேசையில் வைத்துவிட்டு திரும்பினார் அப்பா. "என்ன, சொல்லுங்கோ!" என்றார்.

"தபால் கட்டணம் அறவிடாத நாடு பற்றிச் சொல்வதாக அன்றொரு நாள் சொன்னீங்கள்?" பிரியா கேட்கவும், பல நாட்கள் கடந்தும் அந்த விடயத்தை மகள் மறக்காதது அப்பாவுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"சரி சொல்லுறேன். இப்படி இருங்க பிரியா" என்று கதிரையைக் காட்டினார்.

"எனக்குத் தெரிஞ்சவரை ஒரு நாடு இருக்கிறது. 'அன்டோரா' என்று அதற்குப் பெயர். அந்த நாட்டுக்குள் கடிதங்களை அனுப்ப, தபால் கட்டணம் அறவிடப்படுவதில்லை. வெளிநாடுகளுக்கு தபால்களை அனுப்ப மட்டுமே கட்டணம் அறவிடப்படுகிறது".

அப்பா, சொல்லவும் பிரியா முகத்தில் யோசனை வெளிப்பட்டது. "தபால் கட்டணமாக நாங்கள் ஒட்டுகிற முத்திரைகளின் வருமானத்தை வைத்துத்தான் அரசாங்கம் தபால் சேவையை இயக்குகிறது எண்டு சொன்னீங்களே? அன்டோராவில் அப்பிடி இல்லையா?"

"நல்ல கேள்வி பிரியா. அன்டோரா என்ற அந்தச் சிறிய மலைப்பகுதி நாட்டின் இரண்டு பக்கமும் பெரிய நாடுகளான பிரான்சும் ஸ்பெயினும் இருக்கின்றன. அந்த நாடுகளைச் சேர்ந்த 'லா போஸ்ட்டே', 'கொரியோஸ்' என்ற இரண்டு பொதுத் தபால் சேவை நிறுவனங்களும்தான் அன்டோராவுக்கான தபால் சேவையையும் வழங்குகின்றன".

அப்பா கூறிக்கொண்டு போகவும் பிரியா இடைமறித்துக் கேட்டாள், "இரண்டு நிறுவனங்களும் சேர்ந்துதானா? அது எப்படி? ஏன்?"

"பிரான்ஸ், ஸ்பெய்ன் இரண்டு நாடுகளும் அன்டோராவை முன்னர் தங்களது ஆட்சிக்குள் வைத்திருந்தன. எனவே, அப்படி வைத்திருந்த பகுதிகளுக்கு தங்களது பல சேவைகளை இன்றும் தொடர்கின்றன. அதனால்தான் அந்த நாடுகளே இரு பகுதிகளாக அன்டோராவை வகுத்துக் கொண்டு ஒன்றுக்கு பிரான்சும் மற்றையதற்கு ஸ்பெயினுமாக தபால் சேவையையும் வழங்குகின்றன".






அப்பா நிறுத்தவும் பிரியாவிடமிருந்து இன்னுமொரு கேள்வி பிறந்தது.

"இதனால் ஏதும் குழப்பங்கள் வருவதில்லையா?"

அந்தக் கேள்விக்கும் விடை அப்பாவிடம் தயாராகவே இருந்தது. "சில குழப்பங்கள் இருந்தன. 2004 ஆம் ஆண்டில் இரண்டு பகுதிகளுக்கும் தனித்தனியான குறியீட்டிலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் நிலைமை சீராகிவிட்டது. இதைவிட, அந்த இரு பகுதிகளிலும் பயன்படுத்தப்படும் தபால் முத்திரைகளை பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளிரண்டும் சிறப்புக் குறியீடுகளோடு தயாரித் துள்ளன. அவற்றை, அன்டோரா மக்கள் மட்டுமே பயன்படுத்த இயலும். பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாட்டில் அவை வெளிநாட்டு முத்திரைகளாகவே கருதப்படும்!"

அப்பா சொல்லச் சொல்ல பிரியாவின் முகம் பிரகாசமாயிற்று.

"தபால் சேவையே மிகவும் சுவாரசியமாக இருக்கிறது என்று நினைத்தால், அன்டோரா நாட்டில் உள்ள தபால் சேவை இன்னும் சுவாரசியத்தையும் ஆச்சரியத்தையும் தருகிறதே!" என்றாள்.

இதைப்போலவே இன்னும் பல ஆச்சரியமான தகவல்கள் தபால் சேவையில் இருக்கலாம். எனக்குத் தெரியவந்தால் மேலும் சொல்கிறேன்" என்றார் அப்பா.

# மாச்சு பிச்சு

மாச்சு பீச்சு என்பது, இன்கா நாகரிகத்தவர்களால் உருவாக்கப்பட்டதாக நம்பப்படும் ஒரு நகரமாகும். இது ஒரு பாதுகாப்பு கோட்டையா? அல்லது வழிபாட்டு நகரமா? அல்லது வேறு ஏதேனும் நோக்கம் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதா? எனும் கேள்வி, இன்றளவிலும் ஆய்வாளர்களை குழப்புகிறது. வழமையான கோட்டைகளை போல மதில் சுவர்களை அங்கு காண முடிவதில்லை. ஊற்றெடுக்கும் நீர் வடிந்தோடுவதற்காக உருவாக்கப்பட்ட நேர்த்தியான வடிகால்களும், சிறு குளங்களும், வழிபாட்டுத் தலங்களும், சிறப்பான வீதி அமைப்புக்களும் இந்த பேரரசின் சிறப்பினை பறைசாற்றுகிறது. இத்தனைக்கும், இரும்பு ஆயுதங்களோ, சக்கரங்களோ, எழுத்து வழக்குடைய மொழியோ அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் சாதித்துக் காட்டினார்கள்!! அதனால்தான் இன்கா தனித்துவம் பெறுகிறது.

பச்சாகுடி எனும் அரசன்தான் மாச்சு பீச்சுவின் நிர்மாணத்துக்கு வித்திட்டவனாக கருதப்படுகின்றான். மாச்சு பீச்சுவின் கட்டட நிர்மாணத்துக்கு பல சவால்கள் இருந்தன. அந்த வகையில், நில அதிர்வுகளால் அனைத்துக் கட்டட நிர்மாணங்களும் தகர்ந்து போகக்கூடிய அபாயமும் அங்கிருந்தது. மண் சரிவுகள். அதிக மழைவீழ்ச்சி காரணமாக அந்த மலையுச்சியிலிருந்து வழிந்தோடும் நீர், மண்ணையும் சேர்த்து தன்னுடன் இழுத்து செல்லக்கூடிய அபாயமும் இருந்தது. இவை இரண்டுக்கும் தீர்வு கண்டனர் இன்காவின் பொறியியலாளர்கள். இன்காவின் பொறியியல் வடிவமைப்பு நமக்கு தென்படும் அதன் மேல் பகுதியிலிருந்து ஆரம்பிக்கவில்லை. மாறாக, அதற்கு பல தட்டுகள் அடியிலிருந்து தொடங்குகிறது. நில அதிர்வுகளால் நிலை குலையாமல் இருக்கவும், மண் சரிவு சிக்கலை சீர்செய்யவும், அவர்கள் படிக்கட்டு அமைப்பிலான அடித்தளங்களை, மலையின் அடிவாரத்திலிருந்து அமைக்கத் தொடங்கினார்கள். இந்த அமைப்பும், அதற்காக அவர்கள் பயன்படுத்திய கற்கள் மற்றும் மண்ணின் தன்மையும் சேர்ந்தே, மழைநீர், மண்ணினுள் சென்றுவிடும் விதமான ஒழுங்கமைப்பினை அதற்கு பெற்றுத்தந்தது.



-ஜெ.வீபாகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலன்னறுவையின் சிவாலயங்கள்



சுமார் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக இலங்கையின் தலைநகரமாக விளங்கிய அநுராதபுரத்தை தென் இந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த சோழப் பேரரசினர் கைப்பற்றியதோடு அநுராதபுர இராச்சியம் வீழ்ச்சி அடைந்தது. 11 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த இவ்வரலாற்று நிகழ்வைத் தொடர்ந்து சோழர்கள் பொலன்னறுவையை தலைநகரமாகக் கொண்டு தமது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டினர். அத்தகைய வரலாற்று மண்ணில் இன்றும் சிறப்பான நிலையில் சில சிவாலயங்கள் காணப்படுகின்றன.



## முதலாம் சிவாலயம்

13 ஆம் நூற்றாண்டில் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாம் சிவாலயம் பாண்டிய கட்டடக் கலைச் சிற்பத்திற்கு ஒப்ப அமைக்கப்பட்டதோர் பொக்கிஷமாகும். இக்கட்டடக் கலை மரபானது, சோழ கட்டடக் கலை மரபினையும் விட முற்றிலும் மாறுபட்டதோடு, நுண்மையானதும் நேர்த்தியானதுமாக் திகழ்வது சிறப்பம்சமாகும்.

நுண்ணிய கலை நுட்பங்கள் நிறைந்த அழகியதோர் கட்டடமாக இத்தேவாலயம் இன்றும் காட்சி அளிக்கின்றது. இத்தேவாலயத்தின் கீழ்ப் பகுதி கருங்கற்களாலும் மேல் பகுதி செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். மண்டபம், கர்ப்பக் கிரகம் ஆகிய பகுதிகளை இத்தேவாலயம் கொண்டுள்ளது.













இத்தேவாலயத்தில் இருந்து பல வெண்கலச் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வெண்கலச் சிலைகளில் நர்த்தனமாடும் சிவபெருமானின் சிலையும், பார்வதி தேவியுடன் இருக்கும் சிவபெருமானின் சிலையும் குறிப்பிடத்தக்கவை.



## இரண்டாம் சிவாலயம்



பொலன்னறுவையில் உள்ள சிவாலயங்களில் மிகவும் பழமையான சிவாலயமாக இது கருதப்படுகின்றது. அநுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்றி பொலன்னறுவையை தலைநகரமாக்கிய முதலாவது இராஜேந்திர சோழன் எனும் சோழப் பேரரசனால் அவரின் தாயாகிய வானவன் மகாதேவி ஈஸ்வரம் அவர்களுக்காக இது கட்டப்பட்டதாக இத்தேவாலயத்தில் உள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டடம் தனிக் கருங்கல்லால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தென் இந்திய கட்டடக் கலை மரபிற்கு இணங்க இது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்திலும் கர்ப்பக் கிரகம் உள்ளது. கர்ப்பக் கிரகத்தினுள் சிவலிங்கம் அமைக்கப்பட்டிருந்தமையால் இங்கு இந்துக்களால் அக்காலத்தில் சிவலிங்க பூஜை வழிபாடுகள் நடைபெற்றதா கவும் தெரிய வருகிறது. முன்புற வாயிலின் இரு புறமும் சிவபெருமானின் வாகனமாகிய நந்தியின் இரு கருங்கற்சிலைகளையும் காணலாம். இக்கருங்கற் சிலைகளும் நுண்ணிய கருங்கல் சிற்பக் கலைப் பொக்கிஷங்களாக இன்றும் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆக்கங்கள்



## புகழும் நாடுகளும்

★ கங்காருகளின் பூமி என்றழைக்கப்படுவது;



அவுஸ்திரேலியா

★ அதிகாலையின் பூமி என்றழைக்கப்படுவது; கொரியா

★ உதய சூரியனின் பூமி என்றழைக்கப்படுவது; ஜப்பான்

★ அல்லி மலர்களின் பூமி என்றழைக்கப்படுவது; கானா

★ ஆயிரம் ஏரிகள் பூமி என்றழைக்கப்படுவது;



பின்லாந்து

★ உலகின் புனித பூமி என்றழைக்கப்படுவது; பலஸ்தீனம்

★ கொக்குகளின் பூமி என்றழைக்கப்படுவது; ஸ்கொட்லாந்து

★ நல்லிரவில் சூரியன் உதிக்கும் பூமி என்றழைக்கப்படுவது; நோர்வே

★ உலகின் சீனி உற்பத்திப் பூமி (உலகின் சக்கரைக் கிண்ணம்) என்றழைக்கப்படுவது; கியூபா

நூர்ஹலீனா ஹமீட்,
மருதானை, கொழும்பு-10.

## வெள்ளை நரி

பனி படர்ந்த ஆர்டிக் பிரதேசங்களில் வசிக்கும் நரிகள் தூய வெண்மை நிறம் கொண்டவை. அவற்றினது மூக்கு நுனியும், கண் விழிகளும் மட்டுமே கறுப்பு. ஆனால், கோடைகாலம் ஆரம்பித்தால் இதன் நிறம் கொஞ்சம் கொஞ்சமாக மாறும். பனியில் சறுக்காமல் நடக்க வசதியாக, இதன் பாதங்களில் முடிகள் உண்டு. மீன், பறவை, பூச்சிகளை இவை உண்ணும்.



சில சமயம் இறந்து கிடக்கும் திமிங்கிலமும் இதற்கு உணவாகும். எதுவும் கிடைக்கா விட்டால், தங்களுக் குள்ளேயே ஒன்றை ஒன்று கொன்று தின்றுவிடும். அத்துடன், நகரும் பனிக்கட்டிகள் மேல் நின்றபடி பயணம் செய்யக்கூடியவை இந்த நரிகள்.

எம்.எம்.எம்.அஸ்பாக், தரம்-9C,
க/அஸ்ஹர் மத்திய கல்லூரி,
அக்குறணை.

## அறிஞர்களின் அறிவுரை



★ "ஒரு கோடி ரூபாய் பணம் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என கேட்டபோது "ஒரு நூலகம் கட்டுவேன்" என்றாராம் மகாத்மா காந்தி.

★ அப்பாவி பெண் குழந்தைகளின் கைகளில் இருக்கும் கரண்டியை பிடுங்கிவிட்டு புத்தகத்தைக் கொடுத்தால் போதும் என்றார் தந்தை பெரியார்.

★ தனிமைத் தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என கேட்கப்பட்டபோது; புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக இருந்துவிட்டு வருவேன் என்றார் ஜவஹர்லால் நேரு.

★ பழங்கால மகாவீரர்களை சந்தித்து அவர்களுடன் உரையாடவேண்டுமா? நூலகத்திற்குப் போ என்றார் மாஓசேதுங்.



எம்.அஸ்மத் சாலிஹ்,
தரம்-4B,
மட்/மம/அரபா வித்தியாலயம்,
ஏறாவூர்.

## உலகப் பணக்காரரின் எளிமையான வீடு

அமெரிக்க வர்த்தகரான வொர்ரன் பப்பட் உலகின் மூன்றாவது செல்வந்தராக உள்ளார். பெர்கஷர் ஹதவே நிறுவனத்தின் நிறுவனரும் நிறைவேற்று அதிகாரியுமான 87 வயது பப்பட்டினின் சொத்து மதிப்பு 84 பில்லியன் டொலர்கள் ஆகும். ஆனால், அவரது வீட்டைப் பார்த்தால் இவரா உலக மகா பணக்காரர் என்று நினைக்கத் தோன்றும். நெப்ரஸ்கா



மாநிலத்தில் ஒமஹா நகரின் அமைதியான இடத்தில் அந்த வீடு இருக்கிறது. பெரிய ஆடம்பரமான வீடு அல்ல. 1958 ஆம் ஆண்டு இவர் 31,500 டொலருக்கு அந்த வீட்டை வாங்கினார். இன்றைய மதிப்புக்கு 652,619 டொலர்களைத் தாண்டாது. அதாவது, இவரது மொத்த சொத்து மதிப்பில் இவரது வீட்டின் மதிப்பு 0.01 சதவீதமாகும். இவர் தனது கருத்தைக் கூறும்போது "நான் இங்கு சந்தோஷமாக இருக்கிறேன். வேறு எங்காவது சந்தோஷம் இருப்பதாக இருந்தால் நான் அங்கே செல்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

எம்.அஸ்பாக், தரம்-9C,
க/அஸ்ஹர் கல்லூரி, அக்குறணை.

## ஐக்கிய நாடுகள் சபை



1943 இல் டெஹ்ரான் நகரில் ஒன்று கூடிய பிரித்தானியப் பிரதமர் வின்சட் சேர்ச்சில், ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பிரான்கிளின் ரூஸ்வெல்ட், சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகிய மூன்று பலம் மிக்க உலகத் தலைவர்களும் நடத்திய கலந்துரையாடலின் அடிப்படையிலேயே உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

1945 இல் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபைக்கான கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டது. இதனை 50 நாடுகள் ஏற்றுக்கொண்ட பின்னர் 1945 ஒக்டோபர் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை உதயமானது. இத்தினமே ஐக்கிய நாடுகள் தினமாகவும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ரி.ஹிஸாம், தரம்-8E,
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.


**உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி**

மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செவ்வாயின் ஈர்ப்புவிசை




பூமியில் சுமார் 90 கிலோகிராம் எடையைக் கொண்டிருக்கும் ஒருவர், செவ்வாய் சென்றால் அங்கு அவரது உடல் எடை சுமார் 34 கிலோகிராம் ஆகக் காணப்படும். செவ்வாய் கிரகத்தில் நிலவும் குறைந்த ஈர்ப்புவிசையே இதற்குக் காரணமாகும். புவி மேற்பரப்பு ஈர்ப்புவிசையில் 38 சதவீதமான ஈர்ப்புவிசையையே செவ்வாய் கொண்டுள்ளது.

# பிளாஸ்டிக் பாவனை வேண்டாமே!



ஒவ்வொரு வருடமும் உலகெங்கும் சுமார் ஒரு ட்ரில்லியன் பிளாஸ்டிக் பைகள், 500 பில்லியன் பிளாஸ்டிக் கோப்பைகள், 480 பில்லியன் பிளாஸ்டிக் போத்தல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில், ஒவ்வொரு நாளும் உலகில் எவ்வளவு பிளாஸ்டிக் பொருட்கள் கழிவுகளாக அப்புறப்படுத்தப்படுகின்றன என்பதை நீங்கள் சிந்தித்ததுண்டா?

உலகில் தினமும் சேர்கின்ற கழிவுகளில், விரைவில் மக்கிப்போகாத பிளாஸ்டிக் கழிவுகளும் அடங்குகின்றன. பொதுவாக,




பிளாஸ்டிக் பொருட்கள் மக்கிப்போவதற்கு சுமார் 1000 ஆண்டுகள் எடுக்கின்றன. அவற்றில் நாம் அன்றாடம் பாவனைக்கு உட்படுத்துகின்ற பிளாஸ்டிக் பையொன்று மக்கிப்போவதற்கு சுமார் 500 ஆண்டுகள் எடுக்கின்றன. பிளாஸ்டிக் போத்தலொன்று மக்கிப்போவதற்கு 450 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் வரை எடுக்கின்றனவாம்!

# உலகிலிருந்து விடைபெற்ற காட்டெருதுகள்



பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய மற்றும் ஆசிய காடுகளில் அலைந்து திரிந்த ஒரு விலங்கினம்தான் 'Aurochs' எனும் காட்டெருது ஆகும். பண்டைய கால மனிதர்களால் பிரதானமாக வேட்டையாடப்பட்டு வந்த விலங்கினமாக இந்த காட்டெருதுகள் காணப்பட்டன. இதனால், அவை உலகிலிருந்து முற்றாக அழிவடைந்து விட்டன. பண்டைய காலத்தில் பெரிய கொம்புகளுடன் கம்பீரமான தோற்றத்தில் காடுகளில் வசித்துவந்த Aurochs காட்டெருதுகளை, இன்றளவில் சிதைந்த எலும்புக்கூடுகளாக நூதனசாலைகளிலும் பண்டைய கால குகைச் சித்திரங்கள் சிலவற்றிலுமே காணக்கூடியதாக உள்ளன.

Aurochs காட்டெருதுகள் இன்றைய கால கால்நடைகளின் முன்னோர்களாக கருதப்படுகின்றன. எனினும், இவை உடல் அளவில் 1.85 மீற்றருக்கும் மேற்பட்ட உயரத்தைக் கொண்டவையாகக் காணப்பட்டன. உலகில் இறுதியாக போலந்து நாட்டில்தான் இந்த காட்டெருதுகள் வாழ்ந்துள்ளதாகவும், அவையனைத்தும் 1627 ஆம் ஆண்டளவில் இறந்துவிட்டதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினரால் 2018, ஒக்டோபர் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 03, 2018.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org